திருவாவினன்குடி வெண்பா

ஸ்ரீ சுப்பிரமணியர் மாலை

பஞ்சரத்ன கீர்த்தனை

O23:4y
N23
179899

சற்குருவே துணை.

திருவாரூரைச்சேர்ந்த மடப்புரம்

# ஸ்ரீதெட்சணாமூர்த்தி சுவாமிகள்

# பத்திரசக் கீர்த்தனை

மூன்றாம்பாகம்.

விஜயபுரம் கருணாநிதி அச்சுக்கூடத்தின் அதிபரும்

ஞான சூரியன் பத்திராதிபருமாகிய

ஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்கள்

திருவாய்மலர்ந்தருளியதை

மடப்புரம் புத்தகவியாபாரம்

வே. ரும. நமசிவாய பிள்ளை, ரும. சோமசுந்தரம்

இவர்கள் விருப்பத்தின்படி

விஜயபுரம் :

கருணாநிதி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

Allrights] ரிஜிஸ்தர் காப்பிரைட். [Registered.

1923. [அணா 1

19 SEP 1923

923:4V
N23
129899

19 SEP 1923
MADRAS

# முகவுரை

பொன்னிமாநதி மன்னிநீழலிற் பன்னலந்தரும் சென்னி நாட்டிற்கு ஓர் திலதமாகவும், பிறந்தார் பிறவாப் பெரும் பதியாகவும் மூலாதாரச் சேத்திரமாகவும் விளங்கும் நிறை செல்வத் திருவாரூருக்கு ஒப்பற்ற அணிகலம்போலவும் ஸ்ரீ தியாகராஜப் பெருமானுக்கு வலது நேத்திரம்போலவும் விளங்கும் வன்மீகபுரமாகிய மடப்புரமென்னும் புண்ணிய பூமியில கருதும் அன்பர் கலிதீரப் பருகவந்த செழுந் தேனை விநோதமாதீத விநோத கைவல்ய பரிபூரண சமாதி நிட்டைகொண்டிலகும் கருணாநிதியாகிய ஸ்ரீ குரு தெட்சணா மூர்த்திப் பெருமான் நமது தமிழ் நாடெங்கும் சஞ்சரித்து மனவாக்குக் கெட்டாத அநேக அற்புதத் திருவிளையாடல்கள் புரிந்தருளிய காரணத்தை முன்னிட்டு விஜயபுரம் கருணாநிதி பிரஸ் புரொப்ரைட்டரும் 'ஞான சூரியன்' பத்திராதிபரும் மணிமுத்துநாயகம், அட்சரலட்சம் முதலான அநேக காரணப்பெயர் புனைந்த முத்தமிழ் வித்துவரத்தின சுத்தாத்துவைத கல்விக் களஞ்சியமாகப் பிரகாசிக்கும் நாவலர் பெருமான் ஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்கள் இதற்குமுன்னர் ஷை சுவாமிகள்மீது கல்மனமும் கரைந் துருகும் விதமாக பரமரகசியமான அநேக வேதாந்தக் கருத்துக்களை அமைத்துக் கீர்த்தனையாக இயற்றி அதற்குப் பத்திரசக் கீர்த்தனை என அபிதானஞ் சூட்டி வெளியிட்டார்கள். அதைக் கண்ட அன்பர்கள் பின்னரும் வேண்டிக் கொண்டபடி இரண்டாம் பாகத்தையும், இப்போது மூன்றாம் பாகத்தையும்பாடி வெளியிட்டதானது ஷை ஸ்ரீ குரு தெட்சணாமூர்த்தி சுவாமிகள் பத்தியிலீடுபடும் அன்பர்கள் செய்த பாக்கியமென்றே கருதவேண்டியதா யிருக்கிறது.

ஆயிர முகத்தால் அகன்ற தாயினும்
பாயிர மல்லது பனுவ லன்றே.

என்ற நன்னூற் கருத்தை யனுசரித்து இச்சிறு வசனத்தைத் தீட்ட முன்வந்துள்ளேன். குற்றங்காணில் கற்றவர் பொறுப்பாராக.

இங்ஙனம்

கா. மு. ஸ்கூல் மாஸ்டர்.

உ

சற்குருவே துணை

திருவாரூரைச் சேர்ந்த [illegible]புரம்

# ஸ்ரீதெட்சணாமூர்த்தி சுவாமிகள்மீது

விஜயபுரம் கருணாநிதி அச்சுக்கூடத்தின் அதிபரும்,

'ஞான சூரியன்' பத்திராதிபருமாகிய

ஸ்ரீகருணையானந்த ஞானபூபதி அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# பத்திரசக் கீர்த்தனை

(மூன்றாம்பாகம்.)

19 SEP 1923

### காப்பு—வெண்பா.

கற்றவஞ்சே ராமல் கருணா நிதியாக
நற்றவஞ்சேர்க் குந்தெட்ச ணாமூர்த்திக்—கொற்றவன்மேல்
பத்திரசக் கீர்த்தனங்கள் பாடுதற்கு ஓங்கார
மூத்திமுத லைப்பணிவா முன்.

## கடவுள் துதி.

புள்ளிமயில்மீது என்ற வர்னமெட்டு.

இராகம் - சிந்துபைரவி, தாளம் - ஆதி.

பல்லவி.

எங்கும் நிறைந்தோனே எங்கும் சிறந்தோனே
ஏழைக்கு நீயேகதி என்னுள் வாழுங் கருணாநிதி(எங்)

சாணுநுபல்லவி.

தங்கமய மான சன்னதி யில்ஞான
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
சைதன்ய மேலாம்பதம் வரும்
கைதவிப் பாய்நீ நிதம் (எங்)

சந்ததம் என்னோக்கம் உந்தன்மேலே வக்கம்
தாய்போல்நீ சேயேனை யாள்வா யிதால்தூக்கம்
தானும்வர வில்லையே இனி
யேனும்அருள் எல்லையே (எங்)

தாசர்பரி பாலா சத்வ குணசீலா
தாதாவி னோதா அபேதா பிரக்யாதா
சாதுகள் செங்கோலனே தமிழ்
ஓதஅநு கூலனே (எங்)

கண்ணின்மணி நீயே காவல்புரி வாயே
காமாதி மோகங்கள் வாராம லேயாளும்
கருணையா னந்தம்நிதம் தொழும்
சரணமலரே சதம் (எங்)

## வளர்பிறை எனமொழி என்றமெட்டு.

இராகம்-சிந்துபைரவி, தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மயில்விளை யாடிடும் மடப்புர வாழ்வே
வானவர் களுந்துதி ஞான தேவே
மாதவ மிகுப்பல சாதுகள் தினந்தினம்
வணங்க அருள்புரியும் மாசில் கோவே
வாத மாதி நோய்க ளேக
மகிழ்வு டன்வரு பவர்க ளின்மன
பகிழ்தர மண மான பூவே (மயி)

கருணை புரியவந்த கருணா நிதியே
கருணை யானந்த ஞான பதியே
கருத்தினில் நினைப்பவர் வருத்தமெ லாங்கவிர்
காரணக் கடலினில் சானும் மதியே

கங்கை கொன்றை திங்கள் தங்கு
கடவு ளர்வடி வென இலகிய
கலியுக அவ தார கதிபே(மயி)

பாதம் நீதர வாவா என்றமெட்டு.

பல்லவி.

ஞானதெட்சணா மூர்த்தி அருள்புரிவார்
நாடும் பேர்க்கிஷ்ட பூர்த்தி

அநுபல்லவி.

தேன்மொழி மாது செய்திடும் சூது
சேர்ந்திடாம லிப்போது தமிழை யோது (ஞா)

சரணங்கள்.

ஆகம் அநித்யம் அதிலென்ன பைத்யம்
ஆகலால்நீ அகத்யும் நிதம் வணங்க (ஞா)

சருவசம் பத்து வருமே விபத்து
சாந்தமாகத் துதித்து நிதம் வணங்க (ஞா)

கருணையா னந்தம் கவலும்பர பந்தம்
காட்டும்பாதார விந்தம் தினந் துதிக்க(ஞா)

சிந்தா மணிரூபனே என்றமெட்டு.

இராகம் - ஆனந்தபைரவி, தாளம் - ஆதி.

கண்ணிகள்.

ஞான கருணாநிதி உந்தன்
நளினபாத மலரேகதி
வானோர் புவியோர் துதி செயும்
வாழ்வே அரு ளீவாய் நதி

காணுரு மடப்புர நகர்வாசா எனைக்
காப்பாற்றுவாய் அன்டர் களிநேசா
தானுன சொப்ர காசா கற்ப
தருவாய் விளங்கும் ஈசா

தர்மாதர் மங்தெரி யேன் ஜெப
தபஅநுஷ்டா னம்புரியேன்
கர்மம் அநுசரியேன் உன்னைக்
கண்டால் இனிப் பிரியேன்

சர்வான்ம ஜீவர்கள் பரிபாலா என்னைத்
தானுக்கிக் கொண்டிடும் அநுகூலா
வர்பம்செய் யாதேசீலா உன்னை
மறவேன் வேதாந்த மூலா

உன்னைநான் வந்தடுத்தேன் எந்தன்
உடலாவி யைக்கொடுத்தேன்
கன்னதி யில்படுத்தேன் பல
சலனமெல் லாம்விடுத்தேன்

தன்னை யறிந்து கொள்வ தேசிலாக்யம் ஞான
சற்குருவைப் பணிவது வேயோக்பம்
கன்னல் ரசவாக்கியம் தங்கும்
கருணை யானந்த மேபாக்கியம்

நாதசங்கீதப்போன் என்ற மேட்டு.

இராகம்-செஞ்சுருட்டி, புன்னுகவராளி, தாளம்-ஆதி.

மாமதி தவழ்மணி மாளிகையும்
வாசனை கமழ்மலர்ச் சோலையுஞ்சூழ்
சேம மிகுந்தமடப் புரநகர்வாழ்
தெட்சணா மூர்த்திநின் சேவடியை

சேவித்தேனே சேவித்தேனே
தினந்தின முப்பணிந்து சேவித்தேனே

இன்னம் தயவுசெய்ய மனமில்லையா
ஏழைகள் மேல்வர்மம் ஏன்சொல்லையா
சின்னஞ் சிறுகுழந்தை நான்தானே
திருவுள மிரங்குவீ ரெங்கோனே
தேவதேவே தேவதேவே
சிவனடி யார்புகழும் தேவதேவே

தத்துவ மசிபத வேதாந்தம்
தன்னை யறியும்பெருந் தவவழியின்
முத்தியின் நிலைதனை பக்குவர்க்கு
முறையொடு அருள்செயும் முழுமணியே
மோனவாழ்வே மோனவாழ்வே
முகமுடி வைப்புகலும் மோனவாழ்வே

தரணியெல் லாம்புகழும் நின்கீர்த்தி
தன்னைப் புகழ்வதுவே வெகுநேர்த்தி
கருணையா னந்தமகா குருமூர்த்தி
கருது மெனைக்கைவிட்டால் அபகீர்த்தி
கைவிடாதே கைவிடாதே
கருணையா னந்தனேநீ கைவிடாதே

சங்கரன் பாலா என்றமெட்டு.

இராகம் - பியாக், தாளம் - ஆதி.

கண்ணிகள்.

சிற்சுக வாழ்வை எனக்கருள் வாய்குரு
தெட்சணா மூர்த்திச் சிவ ரூபா
சற்குண முடனுனை அற்பகல் துதிசெய்து
தஞ்சமென் றோர்களுக் கருள் தாபா

எத்தனை விதமாக நித்தமும் துதிசெய்தும்
சித்தமிரங்கா தென்ன தெரியலையே
அத்துவித நிலையே முத்தமிழின் கலையே
ஆண்டருள் வாய்துணை வேறிலையே

பத்தியில் லாமல் நித்தமும் அலையும்
பாழ்மன மானது ஒரு பேயே
இத்தரு ணந்தனில் ஏழையென் மேல்மனம்
இரங்கிக்கண் பார்த்தருள் புரிவாயே

ஆரணம் புகழும் அற்புத மணியே
அன்பர்க ளெனும்அடி யவரினமே
தாரணிதனில் துணை யென்றுகினைந்த எந்தன்
தனக்கருள் வாயுன் தரிசனமே

காரண குருவே கற்பக தருவே
கருணையா னந்தமெனுந் தவ வுருவே
பூரணமுட னுந்தன் பொற்பதத்தைத் துதித்தேன்
புண்ணிய மிருதயம் வளர் மருவே

வேலாமயி லேறிவா என்றமெட்டு.

பல்லவி.

நீத கருணாநிதி நீயே கதி—நவ (நீத)

அநுபல்லவி.

மாதர்பின் னலைந்து மனமது பலைந்து
வாடினேன் முன்னம் வாழ்கிலை குலைந்து (நீத)

சரணங்கள்.

பெண்டுட னினமே பேய்ச்சுரை வனமே
அண்டி னேன்என்னை யாள் தினமே—நவ (நீத)

அருமை யாரணனே அன்பர் பூரணனே
கருணை யானந்த காரணனே—நவ (நீத)

## கலிலோகரி என்றமெட்டு.

இராகம்-காப்பி மனோகரி, தாளம்-ஆதி.

பல்லவி.

ஆரூர் மடப்புர மெனும்பதியே
ஆள்கரு ணாநிதியே இனியதிரு(ஆரூ)

அநுபல்லவி.

சீரார்திரு வருள் புரி பவனே
சீலமஹா தவனே இனியதிரு(ஆரூ)

சரணங்கள்.

தனியாந்திரு வருள்வழி நில்லா
தமியனுனும் புல்லா
இனியாகிலும் ஒருமொழி சொல்லா
திருந்திடாதே வல்லா
நினையா என் மனமது கல்லா
நிதமத னுடன் பல்லா இனியதிரு(ஆரூ)

கருணா ஞானசந்த்ர நதி
கண்டபேர்க்கு வசமே
கதிவேறிலை யென்றுபோற்றித் தொழக்
கனிகருணா ரசமே
கருணையா னந்தனை வசமே
கண்டாலிது நிசமே இனியதிரு(ஆரூ)

## தற்பரா பரா பரா என்றமெட்டு.

பல்லவி.

எந்தன் மீதில் கோபமோ
ஏழைநான் செய்த பாபமோ நீ(எந்த)

அநுபல்லவி.

சந்திர மௌலி தன்வடிவே
சாதாநீதா நன்மறை முடிவே நீ(எந்த)

சரணங்கள்.

சற்குரு தெட்சணா மூர்த்தியே
தாசர்க் கருளிஷ்ட பூர்த்தியே
கற்கண்டை யொத்த வாசகனே
காவா தேவா நானுன் மகனே நீ(எந்த)

நித்தமும் போற்றிசெய் தேனையா
சித்த மிரங்காத தேன்மெய்யா
சுத்தமெய்ஞ் ஞான தேசிகனே
துங்கா தங்கச் சுடர்முகனே நீ(எந்த)

நானுனக் கெப்போதும் சொந்தமே
ஞான கருணையா னந்தமே
வானப்ர காச மாமதியே
வாகா யோகா நற்குணபதியே நீ(எந்த)

சரஸ்வதி தாயே என்றமெட்டு.

இராகம்—அமீர்கல்யாணி, தாளம்—ரூபகம்.

பல்லவி.

கருணை செய்குவாய் சாமி கருணை செய்குவாய்
காக்கும் தெட்சணா மூர்த்தியே திருக்(கரு)

சரணுபல்லவி

தாரணி வாழ்வது சகலமும் பொய்யே
சந்தத முந்தன் தன்னருள் பெய்யே
சரணமே கெதி உந்தன் சரணமே கெதி
தயங்கியே மனம் மயங்கிடா வண்ணம்(கரு)

மண்ணிலே தினம் பூத தேகம்
வளர்ப்பதீத என் உத்தியோகம்
புண்ணிய வாழ்வே மஹா புண்ணிய வாழ்வே
புத்திரன் என்பேல் சித்தம் வைத்துநீ(கரு)

திருமறை புகழ் நினது வேதம்
செவிடன் காதில் சங்க நாதம்
கருணையா னந்தா ஞான கருணையா னந்தா
காதலாகி னேன் ஆதர வுடன்(கரு)

## மரகத விகசித மணிமயிலா என்றமெட்டு.

பல்லவி.

தமிழ்மறை பரவிய தவவடிவே—செங் (தமி)

சரணுநுபல்லவி.

கமல பாதவிணை கண்டவ ருய்வார்
கண்டபேர்கள் நிதம் தொண்டுகள் செய்வார்
கருணை கரனே கதிதா பரனே
கஞ்சமலர் தஞ்சமென அஞ்சலிசெய் தேன்—செங்(தமி)

அரசனில் லாவிடில் செழிக்குமோ ராஜ்யம்
அப்படி நீயன்றி அருளில்லை பூஜ்யம்
அருவே திருவே சுரமா தருவே
அஞ்சலஞ்ச லென்றுனையே தஞ்சமடைந் தேன்—செங்(தமி)

கடல்போல் ஒழியாக் கவலைப்ர பஞ்சம்
கண்ணியிற் பறவைபோல் கலங்கினேன் நெஞ்சம்
கதிவே றிலையே கமலா சனனே
கருணையா னந்தன்புகழ் கனிமொழியே—செங்(தமி)

## ஞான தேசிகனே என்றமெட்டு.

பல்லவி.

சீல நாயகனே—நீதி லாத நாத நீத (சீல)

சரணுநுபல்லவி.

மூலக்கொழுங் கனல் தன்னையே தூண்டி
மூலமுத லாறு வீட்டையுந் தாண்டி
மூக்கின் மேலே தாக்க நோக்கி
மோன ஞான மாக நீசெய்(சீல)

179893
~~79896~~



ஆயிரத் தெட்டிதழ்த் தாமரை நோக்கி
அம்பிகை வீட்டுக் கபாடத்தை நீக்கி
ஆவல் கொண்டு தேனை யுண்டு
ஐபனைக் கண் டுய்யச் செய்யுப் (சீல)

நாசிக்கு மேலொரு ஊசித் துவாரம்
நாதமும் கீதமுங் கேட்கும் அபாரம்
நாச மேக வாசி யோக
நன்மை காண வன்மை செய்யும்(சீல)

நற்றமிழ் பாடும் அமிர்தப்ர வாக
ஞான கருணையா னந்தமெய் யோக
நம்பனே பென் துன்பம் நீக்கி
நாளு முந்தன் தாளில் சேர்க்கும்(சீல)

அடங்காது அடங்காது என்றமெட்டு.

குருமூர்த்தி குருமூர்த்தி கும்பிட்டவர்க்கு - ஞான (குரு)
கருணையா னந்தம்தமிழ் கரும்புபோல் ருசிக்குதென்று
சரமாரி அருள்பொழியும் சாமிதெட்ச ணாமூர்த்தி
தரிசனஞ் செய்வோம்—புது
மருமலர் கொய்வோம்—அவர்
சரணத்திற் பெய்வோம். ஞான—(குரு)

## மங்களம்.

இராகம்—ஆனந்தபைரவி, தாளம்—ஆதி.

பல்லவி.

கருணாநிதிக்கு மங்களம் தனையுணர்ந்த கனவான்களுக்கு மங்களம்

அநுபல்லவி.

வருணாச்சிரம மென்னும் வரம்பு தனைக்கடந்து
துரியமடைந்து தமிழ்ச் சொல்பவர்க்கு மங்களம்(கரு)

சரணம்.

இந்தத்தமிழை வாசிப்போர் மனமகிழ்ந்து இனிமையுடனே ஆசிப் [போர்
சிந்தைமகிழ்ந் திந்நூலை செப்பிய நாவலர்க்கும்
நிந்தையில்லா துலகில் நித்யஜெய மங்களம்(கரு)

சம்பூரணம்.

# நமது மஹா ஜனங்களே!

## இன்னுமா தூங்குகிறீர்கள்?

படிக்கப் படிக்கத் தித்திக்கும் பரமானந்தமாகச் சிறந்த

மாதாரம்பச் செந்தமிழ்ப் பத்திரிகையாகிய

# "ஞான சூரியனுக்கு"

## உடனே சந்தாதாரர்களாகச் சேர்வீர்களாகில்

## அஞ்ஞான நித்திரை நீங்கி மெய்ஞ்ஞான விழிப்படைவீர்கள்

நாம் எதற்காகப் பிறந்தோம் என்பதை யுணர்ந்து தன்னையும் தனக்காதாரமான தலைவனையும் அறிந்து ஆத்ம லாப சுயராஜ்யம் அடைவதற்காக உலகப்பிரசித்திபெற்ற வேதாந்த பாஸ்கரன், ஞானக்களஞ்சியம், யோகரகசியம் பக்தி மகத்வம் முதலிய நூற்களின் ஆசிரியராகிய முத்தமிழ் வித்வ

**ஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்களால்**

ஒவ்வொரு மாதமும் வெளியிடப்பெறுகிறது.

வருஷ சந்தா ரூ. **1—8—0**

விஜயபுரம் "கருணாநிதி" அச்சியந்திரசாலையின் அதிபரும் ஞான சூரியன் பத்திராதிபருமாகிய

**ஸ்ரீலஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்களால்**

**இயற்றி வெளியிடப்பெற்ற**

| | | | |
|---|---|---|---|
| வேதாந்த பாஸ்கரன் முதல்பாகம் | ... | ரூ. | 1—0—0 |
| தோத்திரமஞ்சரி | ... ... | ,, | 0—4—0 |
| கந்தப்புகழ் | ... ... ... | ,, | 0—2—0 |
| திருப்பாவணி | ... ... | ,, | 0—2—0 |
| முருகப்புகழ் | ... ... | ,, | 0—2—0 |
| தெய்வப்புகழ் | ... ... | ,, | 0—2—0 |
| காவடிக்கதம்பம் | ... ... | ,, | 0—2—0 |
| முருகர்தியானம் | ... ... | ,, | 0—1—0 |
| காவடிக்காட்சி | ... ... | ,, | 0—1—0 |
| தெட்சணாமூர்த்தி பத்திரசக்கீர்த்தனை முதற்பாகம் | | | 0—1—0 |
| ஷை இரண்டாம்பாகம் | | ,, | 0—1—0 |
| ஷை மூன்றாம்பாகம் | | ,, | 0—1—0 |

"ஞான சூரியன்" ஆபீஸ்,

விஜயபுரம்—திருவாரூர், S. I. Ry.

9A
10-25